**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 49/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW8 | Examined as : | PW5 |
| Name | : முருகன் | Defence | : |
| Father Name | : பாப்பையன் | Court | : |
| Village | : ஆலங்காடு, | Taluk | : சீர்காழி |
| Calling | : | Religion | : |
| Age | : 54 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 19.03.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை : –

நான் சீர்காழி, ஆலங்காடு முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள், தேதி, மாதம் நினைவில் இல்லை. வெங்கடேசன் என்பவர் என்னை ஒரு நாள் அழைத்து அவரது உறவினர் வீட்டில் திருடு போனது சம்பந்தமாக ஒருவரை பிடித்து வைத்துள்ளதாக கூறி செம்பனார்கோவில் காவல்நிலையத்திற்கு என்னை கூப்பிட்டார். நானும், வெங்கடேசனும் செம்பனார்கோவில் காவல் நிலையத்திற்கு சென்றோம். நாங்கள் சென்றபோது அங்கு ஆஜரில் இருக்கும் எதிரிதான் லாக்கப்பில் இருந்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி கையொப்பங்களை போலீசார் என்னிடம் கேட்டதற்காக போட்டுக்கொடுத்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையில் கடந்த 16.12.2022 ஆம் தேதி மதியம் 02.00 மணிக்கு நானும், புருஷோத்தமன் என்பவரும் சொந்த வேலையாக மயிலாடுதுறை சென்றவிட்டு திரும்ப ஊருக்கு வரும்போது மணக்குடி, உப்புநகர் மாரியம்மன்கோவில் அருகில் செம்பனார்கோவில் காவல் ஆய்வாளர் ஒரு நபரை பிடித்து வைத்திருந்தார்கள் என்றும், எங்களை சாட்சிகளாக வைத்து அந்த நபரை விசாரணை செய்தார்கள் என்றும், அந்த நபர் 2021 ஆம் வருடம் ஜூன் மாதம் தலைச்சங்காடு முகவரியில் உள்ள வீட்டை உடைத்து உள்ளே சென்ற அங்கு பீரோவில் இருந்த நகை, பணம் ஆகியவைகளை திருடியதாகவும், மேலும், பல இடங்களில் திருடி பொருட்களையும், சேர்த்து எதிரி அவரது வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருப்பதாகவும் கூறியதை போலீசார் பதிவு செய்தார்கள் என்றும், எதிரி அவரது வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த நகைகளை எடுத்து ஆஜர் செய்ததை மாலை 04.00 மணிக்கு மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் நானும், புருஷோத்தமனும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்தினால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் என்னிடம் காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். என்னுடன் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது நண்பர் வெங்கடேசன் அழைத்ததன் பேரில் தான் நான் காவல் நிலையத்திற்கு சென்று கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 49/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW9 | Examined as : PW6 | |
| Name | : புருஷோத்தமன் | Defence | : |
| Father Name | : கோவிந்தராஜ் | Court | : |
| Village | : நடராஜபிள்ளை சாவடி, | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 59 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 19.03.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை : –

நான் சீர்காழி, ஆலங்காடு முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி கையொப்பங்களை நான், எனது சொந்த வேலையாக காவல் நிலையத்திற்கு சென்றபோது போலீசார் என்னிடம் கேட்டு பெற்றுக்கொண்டார்கள். மேற்படி கையொப்பங்களை எதற்காக போட்டேன் என்று நினைவில் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**:-

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையில் கடந்த 16.12.2022 ஆம் தேதி மதியம் 02.00 மணிக்கு நானும், முருகனும் சொந்த வேலையாக மயிலாடுதுறை சென்றவிட்டு திரும்ப ஊருக்கு வரும்போது மணக்குடி, உப்புநகர் மாரியம்மன்கோவில் அருகில் செம்பனார்கோவில் காவல் ஆய்வாளர் ஒரு நபரை பிடித்து வைத்திருந்தார்கள் என்றும், எங்களை சாட்சிகளாக வைத்து அந்த நபரை விசாரணை செய்தார்கள் என்றும், அந்த நபர் 2021 ஆம் வருடம் ஜூன் மாதம் தலைச்சங்காடு முகவரியில் உள்ள வீட்டை உடைத்து உள்ளே சென்ற அங்கு பீரோவில் இருந்த நகை, பணம் ஆகியவைகளை திருடியதாகவும், மேலும், பல இடங்களில் திருடி பொருட்களையும், சேர்த்து எதிரி அவரது வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருப்பதாகவும் கூறியதை போலீசார் பதிவு செய்தார்கள் என்றும், எதிரி அவரது வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த நகைகளை எடுத்து ஆஜர் செய்ததை மாலை 04.00 மணிக்கு மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் நானும், முருகன் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்தினால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**